**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மெய்ப்பாடுகள் எத்தனை வகைப்படும்?
2. புதுக்கவிதை என்றால் என்ன?
3. நாடகம் – பிரித்து பொருள் தருக.
4. தமிழில் வெளிவந்த முதல் சிறுகதை எது? அதன் ஆசிரியர் யார்?
5. சிறுகதை மன்னன் எனப்போற்றப்படுவபவர் யார்?
6. பா– எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. கும்மிப்பாடல் என்பது என்ன?
8. புதுக்கவிதையை 'உரைவீச்சு' என்றவர் யார்.
9. சிலப்பதிகாரத்தின் காதைகள் யாவை?
10. பள்ளு, குறவஞ்சி , நொண்டி ஆகியவை எந்த வகையைச் சார்ந்த இலக்கியம்?
11. "சில நேரங்களில் சில மனிதர்கள்" – என்ற நாவலின் ஆசிரியர் யார்?
12. ஞானப்பீட விருதினைப் பெற்ற அகிலனின் நாவல் எது?
13. சீன நாடகத்தின் தந்தை யார்?
14. மாதவி ஆடிய ஆடல்கள் எத்தனை?
15. இறையனார் களவியலுக்கு உரை எழுதியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிறுகதையின் இயல்புகளில் ஏதேனும் மூன்றினைக் கூறுக.
2. துப்பறியும் புதினம் என்றால் என்ன?
3. கலிப்பாவின் உறுப்புகள் எவை?
4. புதுக்கவிதைப் பொருண்மை யாது?
5. படைப்பாளிகளின் தகுதிகள் மூன்றினைக் குறிப்பிடுக.
6. நனவோடை உத்தி என்றால் என்ன?
7. வாழ்விற்கு வழிகாட்டும் தத்துவ நெறிகளின் பயன்கள் இரண்டினைக் கூறுக?
8. மணிபிரவாள உரைநடை என்றால் என்ன?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) புதினங்களின் வகைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வெண்பாவின் இலக்கணம், வகைகள் குறித்து விவரிக்க.

2. (அ) புதுக்கவிதையின் உத்திகள் குறித்து விளக்கு.

(அல்லது)

(ஆ) சிறுகதைகளின் கதைக்கரு, கதைமாந்தர்கள் மூலம் சமூக, குடும்ப, தனிமனிதச் சிக்கல்கள் எங்ஙனம் வெளிப்படுகின்றன? – ஆராய்க.

3. (அ) பெண்படைப்பாளர்களின் நோக்கும் போக்கும் சமுதாய உணர்விற்கு இடமளிக்கிறதா? திறனாய்வு செய்க.

(அல்லது)

(ஆ) காலந்தோறும் நாடகம் பெற்று வரும் மாற்றங்கள், சிறப்புகள் குறித்து விளக்குக.

***